**கூலிகள்**

நன்கமைந்த, நன்கமையாத இரு துறைகளிலும் 1984 இல் கூலிகள் அதிகரித்தன. எனினும், முன்னைய ஆண்டினைப் போலல்லாது நன்கமைந்த துறையில் கூலி அதிகரிப்புக்கள் அதிகளவில் காணப்பட்டன. அரசதுறையிலுள்ள ஊழியர்களின் வெவ்வேறு வகைகளுக்கான கூலிகளின் அதிகரிப்பு வீதங்கள் முன்னைய ஆண்டினைப் போன்று விளங்கின. கூலிகளில் குறிப்பிடத்தக்க மேல்நோக்கிய திருத்தமும் ஏப்பிறலில் பெருந்தோட்டத்துறையில் ஆண், பெண் கூலி வீதங்களை சமப்படுத்தலும் 1984 இல் கூலி மாற்றங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க பண்புகளாக இருந்தன. இதனைத் தொடர்ந்து வேளாண்மை தொழிலாளர்களின் கூலி அதிகரிப்பே கூலிநிர்ணய சபையினால் உள்ளடக்கப்படும் வர்த்தகங்களுக்குள் அதியுயர்வானதாகும். கூலிநிர்ணய சபையினால் அடக்கப்பட்டுள்ள ஏனைய வகைத் தொழிலாளர்களின் கூலிகள் மிதமாக மட்டுமே அதிகரித்தன. நன்கமையாத துறையில் தேயிலை தவிர்ந்த எல்லாத் துணைத்துறைகளின் பெயரளவிலான கூலி வீதங்கள் முன்னைய ஆண்டினைப் பார்க்கிலும் குறைந்த வீதத்திலேயே அதிகரித்தன.

அரசதுறையில் 1983 செத்தெம்பரிலிருந்து ரூ. 246 இலேயே மாற்றமின்றிக் காணப்பட்ட வாழ்க்கைச் செலவுச் சுட்டெண்ணுடன் தொடர்புள்ள இழப்பீட்டுத் தொகை 1984 மாச்சில் மீளாய்வு செய்யப்பட்டு ரூ. 102 கொண்ட மேலதிக தொகையொன்று வழங்கப்பட்டது. எனினும் திருமணமாகாத அரச அலுவலர் ஒருவர் அல்லது கணவன் அல்லது மனைவி, அரசு, வங்கிகள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சபைகள் அல்லது வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும் தனியார் துறையில் தொழில் பார்க்கும் அலுவலர் வாழ்க்கைச் செலவுப்படியின் அரைப்பங்கிற்கே தகைமையுடையவர்களாவர். 1984 செத்தெம்பரில் வாழ்க்கைச் செலவுப் படியின் இரண்டாம் மீளாய்வுடன் மேலும் ரூ. 56 ஒகத்து சுட்டெண் அடிப்படையில் வழங்கப்பட்டது. 1984 இல் வாழ்க்கைச் செலவு இழப்பீட்டுத் தொகையின் மொத்த அதிகரிப்பு ரூ. 158 ஆக விளங்கியது.


1984 ஏப்பிறலில் இருந்து அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் ஆண், பெண் நாள் கூலி வீதங்களைத் தேயிலை வளர்த்தல், தயாரித்தல் ஆகிய வர்த்தகங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு ரூ. 23.78 ஆகவும், இறப்பர் வளர்த்தல், தயாரித்தலில் உள்ளவர்களுக்கு ரூ. 23.93 ஆகவும் தெங்கு வளர்த்தல் வர்த்தகத்திலுள்ளவர்களுக்கு ரூ. 19.90 ஆகவும் உயர்த்தி சமப்படுத்தியுள்ளன. கொக்கோ, ஏலக்காய், மிளகு வளர்த்தலும், தயாரித்தலும் வர்த்தகத்திலும் ரூ. 18.80 ஆகக் கூலிகள் அதிகரித்துள்ளன. அதன்படி தேயிலை வளர்த்தலும், தயாரித்தலும் வர்த்தகத்திலுள்ள ஆண், பெண் கூலிகள் 1984 மாச்சுடன் ஒப்பிடுகையில் ஏப்பிறலில் முறையே 30 சதவீதத்தாலும், 56 சதவீதத்தாலும் அதிகரித்தது. இறப்பர் வளர்த்தலும் தயாரித்தலும் வர்த்தகத்திற்கான ஒத்த அதிகரிப்புக்கள் முறையே 19 உம், 39 சதவீதமுமாகும். இதேபோல், தென்னை வளர்த்தல் வர்த்தகத்தில் ஆண், பெண் கூலிகள் முறையே 25 சதவீதத்தாலும், 46 சதவீதத்தாலும் அதிகரித்த வேளையில் கொக்கோ, ஏலக்காய், மிளகு வளர்த்தலும் தயாரித்தலும் வர்த்தகத்தில் முறையே 26 சதவீதத்தாலும், 59 சதவீதத்தாலும் அதிகரித்தன.

நன்கமைந்த துறையில் கூலி மாற்றங்களை அளவிடும், அரச ஊழியர்களுக்கும், கூலிச் சபையினால் உள்ளடக்கப்பட்ட வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்களுக்குமான, அதிகுறைந்த கூலி வீதச் சுட்டெண்கள் அட்டவணை 1.28 இல் தரப்பட்டுள்ளன.

## கூலிவீதச் சுட்டெண்கள்

1978 திசெம்பர் = 100

காலாண்டு தோறும்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.28

## நன்கமைந்த துறையின் கூலிவீத சுட்டெண்கள்

**1978 டிசெம்பர் = 100**

| நன்கமைந்த துறை | கூலிவீதச் சுட்டெண் | | புள்ளி மாற்றம் | சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| | 1983 | 1984 | | |
| 1. கூலிகள் நிர்ணய சபைகளின் கீழான தொழிலாளர்கள் ... | 188.8 | 224.3 | 35.5 | 18.8 |
| i. வேளாண்மையில் உள்ள தொழிலாளர்கள் ... | 198.7 | 250.2 | 51.5 | 25.9 |
| ii. கைத்தொழில், வர்த்தகம் ஆகிய வற்றில் உள்ள தொழிலாளர்கள் ... | 163.1 | 168.3 | 5.2 | 3.2 |
| iii. பணிகளில் உள்ள தொழிலாளர்கள்... | 177.8 | 179.7 | 1.9 | 1.1 |
| 2. எல்லா அரசாங்க ஊழியர்கள் ... | 215.7 | 246.6 | 30.9 | 14.3 |
| i. எல்லா நிறைவேற்று தரம் அல்லாத அலுவலர்கள் ... | 204.6 | 231.4 | 26.8 | 13.1 |
| ii. எல்லா சிற்றூழியர்கள் ... | 226.2 | 260.9 | 34.7 | 15.3 |
| 3. அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் ... | 188.1 | 211.4 | 23.3 | 12.4 |

மூலங்கள்: தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

அரச ஊழியர்களுக்கான கூலிவீதச் சுட்டெண்கள் (பள்ளிக்கூட ஆசிரியர்கள் நீங்கலாக) 1983 இன் 14.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 14.3 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டைப் போன்றே சிற்றூழியர்களுக் கான கூலிகள் 1983 இன் ஒத்த அதிகரிப்புக்களிலும் குறைவானதாக விளங்கிய போதிலும், அதிகூடிய வீதத்தில் (15.3 சதவீதம்) உயர்வடைந்தன. நிறைவேற்று அலுவலர் அல்லாதோர்களினதும் பள்ளிக்கூட ஆசிரியர்களினதும் கூலிகள் முறையே 13.1 சதவீதத்தாலும் 12.4 சதவீதத்தாலும் அதிகரித்தன.

கூலிநிர்ணயச்சபை வர்த்தகங்களிலுள்ள தொழிலாளர்களின் பணக் கூலிகள் முன்னைய ஆண்டின் 7.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 18.8 சத வீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு பெருந்தோட்டத் துறையில் 1984 ஏப்பிறலில் கூலிகளின் திருத்தங்களின் காரணமாக ஏற்பட்டன. வேளாண்மையி லுள்ள தொழிலாளர்களின் பணக்கூலிகள் மாத்திரம் முன்னைய ஆண்டின் 9.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 25.9 சதவீதத்தால் உயர்வடைந்தது. கைத் தொழில், வர்த்தகம் ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்களும் பணிகள் தொழி லாளர்களும் 1984 இல் முறையே 3.2 சதவீதம் 1.1 சதவீதம் கொண்ட கூலி அதிகரிப்புக்களை மட்டுமே பெற்றனர். முன்னைய ஆண்டின் இதையொத்த அதி கரிப்புக்கள் முறையே 1.3 சதவீதமாகவும் 4.8 சதவீதமாகவும் விளங்கின. அதன்படி, பெருந்தோட்டத் தொழிலாளர்களைத்தவிர்ந்த கூலிநிர்ணயச்சபையினுல் அடக்கப்பட்ட ஏனைய வர்த்தகங்களில் கூலி அதிகரிப்புக்கள் 1984 இல் மித மாகவே காணப்பட்டனவென்ற முடிவுக்கு வரலாம்.

அரச ஊழியர்களினதும் கூலி நிர்ணயச்சபை வர்த்தகங்களிலுள்ள தொழிலா ளர்களினதும் உண்மைக் கூலிவீதச் சுட்டெண்கள் எல்லா அரச ஊழியர்களினதும் (அரசபள்ளிக்கூட ஆசிரியர்கள் நீங்கலாக) உண்மை வீதங்கள் 1984 இல் 2.2சத வீதத்தால் வீழ்ச்சியடைந்ததைக் காட்டின. அரச பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கான

இவ்வீழ்ச்சி 3.9 சதவீதமாகும். கூலிநிர்ணயச்சபை வர்த்தகங்களில் உள்ள தொழிலாளர்களுக்கான உண்மைக் கூலிகள் பெருந்தோட்டத்துறையின் கூலிஅதிகரிப்பின் காரணமாக 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. வேளாண்மைத்துறைத் தொழிலாளர்களுக்கு மட்டுமே உண்மைக் கூலி அதிகரிப்பு 7.6 சதவீதமாக அதிகரித்தது. கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றிலுள்ள தொழிலாளர்களினதும் பணிகளிலுள்ள தொழிலாளர்களினதும் உண்மைக் கூலிகள் 1984 இல் முறையே 11.6 சதவீதத்தாலும் 13.6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

## வர்த்தகம்

பன்னாட்டுச் சந்தைகளில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், சார்புரீதியில் இறப்பர் தெங்கு ஆகியவற்றின் சாதகமான விலைகள், கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஆகியவற்றின் பெருமளவு விளைவாக 1984 இல் நாட்டின் பன்னாட்டு வர்த்தகச் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது. சிஎஉ நியதிகளில் ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் 7 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 1984 இல் 44 சதவீதத்தால் அதிகரித்தது.

இதே நேரம், 1983 இல் 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 1984 இல் இறக்குமதிகளுக்கான கேள்வி சிறிதளவாக மாத்திரமே உயர்வானதாக (சிஎஉ நியதிகளில் 0.6 சதவீதம்) இருந்தது. நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் முக்கியமாக வளமாக்கியின் மீதான உயர்ந்த செலவின் காரணமாக இடைநிலைப் பொருட்களின் அத்தகையபெறுமதி 5 சதவீதத்தால் உயர்வடைந்தது. முதலீட்டுப் பொருட்கள் மீதான மொத்த இறக்குமதி 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனினும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி 1983 இல் கப்பல், வான்கலங்களின் மீதான பெரும் செலவினைப் பிரதிபலித்தது. கப்பல்கள், வான்கலங்கள் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 4 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தன.

அட்டவணை 1.29

### வர்த்தகநிலுவை 1982—1984

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்
(சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | இறக்குமதிகள் (அ) | | ஏற்றுமதிகள் (ஈ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சீராக்கப் பட்டது (இ) | சுங்கம் | சீராக்கப் பட்டது | சுங்கம் | சீராக்கப் பட்டது |
| 1982 ... | 36,876 (1,605) | 41,946 (1,826) | 21,124 (919) | 21,454 (934) | – 15,751 (–686) | – 20,492 (–892) |
| 1983 ... | 42,021 (1,670) | 45,558 (1,811) | 25,183 (1,001) | 25,096 (998) | – 16,838 (–669) | – 20,461 (–813) |
| 1984(ஆ) ... | 46,913 (1,799) | 47,541 (1,823) | 37,005 (1,419) | 37,347(இ) (1,432) | – 9,908 (–380) | – 10,194 (–391) |

(அ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சுங்க அறிக்கைகளில் பதிவு செய்யப்படாத கப்பல்கள், வான்கலங்கள் ஆகியவற்றின் பெறுமதிகளை உள்ளடக்குகிறது.
(ஈ) மீள ஏற்றுமதிகளை உள்ளடக்குகிறது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், உணவு ஆணையாளர் திணைக்களம், இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும் ஏனைய முக்கிய இறக்குமதியாளர்களும், அரச இரத்தினக் கல் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட ஏயர் லங்கா, இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்.